# ஆளுமைச் சிந்தையும் ஆதிக்க வெறியும்!

மனித குலம் மட்டுமே செயல் படுத்தும், மனிதர்க்கு மட்டுமானவையே இவை. வாழும் உயிரினங்கள் எவையிடத்தும் இவை காணப்படுவதில்லை. மனிதன் எலியைத் தவிர்த்து எந்த மற்ற உயிரினமும் உணவைச் சேமிப்பதில்லை. பசியன்றி, எந்த விலங்கும் வேட்டையாடுவதில்லை. சிங்கம் புலியே வேட்டையாடும். அவை புசித்த மிச்சத்தையே உண்டு பின் தொடரும் வாழும் விலங்குகளும் உண்டு. இந்த ஆதிக்க வெறியும் ஆளுமைச் சிந்தையுமே, மதம், இனம், மொழி எனும் ஆடை பூண்டு, மனிதரிடத்தில் வாழ்கின்றது வளர்கின்றது.

இந்த ஆளுமைச் சிந்தை, மன வருத்தத்தை மட்டுமே தர வல்லது. ஆனால், இந்த ஆதிக்க வெறி, உயிர்ப்பலி வரைத் தொடரக் கூடியது. இன்றைய நம்முடைய அரசியல் ஆடுகளத்தில், இவையே முன்னின்று வாக்குகளைத் தீர்மானிக்கின்றன. தமிழ் நாட்டில் மட்டுமல்ல, இந்தியா முழுமைக்கும் இதுவே கலனாகக் கொள்ளப் படுகிறது. மதம், மொழி, இனம் என அவற்றின் கூறுகளை நிலைக்கலனாகக் கொண்டு செயல்படுத்தப் படுகிறது. காலச் சூழலின் செயல்பாடுகளால், நிகழ்வுகளில் சாயம் பூசி, தேவையான வகையில் வகைப்படுத்திச் செயல் படுகின்றன இந்த ஆளுமைச் சிந்தையும் ஆதிக்க வெறியும். இத்தகைய இழிச் செயல்களுக்கு ஊடகங்களும் மிகப் பெரும் காரணிகளாக அமைகின்றன. ஒன்றையொன்று குறை கூறிக் கொண்டும் செயல்பட, மாந்தரும் ஒருவரை ஒருவர் சார்ந்து நின்றும் பயணிக்கின்றனர். எந்த மகானும் மதங்களைத் தோற்றுவிக்க வில்லை. வாழும் வகையைதான் சொல்லி வைத்தார்கள். பின்பற்றியவர்கள், ஒரு கூட்டமாக இயங்கத் தொடங்கி, அந்தச் சிந்தனைகளில், வரன்முறைகளைத் திணித்து, மதமாக்கிக் கொண்டனர். ஒரே சிந்தனை நான்காபப் பிரிவதும் எட்டாகத் திரிவதும், ஒவ்வொரு தனிமனிதனும் தன்னை நிலை நிறுத்தி, தலைவனாக்கிக் கொள்ளும் முயற்சியே!. மனிதன் ஏதோ ஒரு நிலையில் சார்ந்து வாழத் தலைப் படுவதால், அதுதான் பாதுகாப்பு என எண்ணம் கொள்வதால், குருதிக் கொப்பளிக்க, கோரத்தாண்டவம் எழுகிறது.

ஆளுமைச் சிந்தை ஆதிக்க வெறி இரண்டுமே தீயது என்றாலும், உயிர்ப்பலியாய் உறவாடுவது, ஆதிக்க வெறிதான். ஒரு குறிப்பிட்ட சமூகத்துக்கு ஆளுமை சிந்தை இருக்கிறது என்றாலும், அதனில் முதலில் மாற்றம் கண்டது, தமிழ்மண். ஒன்றை யாவரும் தெளிவு படுத்திக் கொள்ள வேண்டும். மதமோ, மதம் சார்ந்த வழிபாடோ, தனி மனித உரிமை. தனிமனித தேவையின் அடிப்படையில் மதம் மாற்றம் நிகழ்த்துவது எங்ஙனம் தவறோ, அதேபோல், அந்த அடிப்படைக் காரணமாக, அமையும், பொருளாதாரம், சமூகச் சமமின்மை ஆகியவற்றை நீக்காமல், கூச்சலிடுவது தவறு. இனம் என்பது, மனிதன் இனக்குழுக்களாய் வாழத் தலைப் பட்டதிலிருந்து தொடர்வது. தொழில் சார்ந்த நிலையே அடிப்படையானது. மனிதன் சமூக விலங்கு என்பதால், அந்த கட்டினின்று அவன் வெளியேற விரும்புவதில்லை. மனிதனின் அடிப்படை தேவையான உணவுப் பழக்களும் அவனை அங்கேயே சுழல வைக்கிறது. ஒரு பகுதியில், சோறு சாதமாக வடிக்கப் படும். இன்னொரு பகுதியில், உப்பிட்டு சோறாகப் பொங்கப் படும். ஒரே இனம் அல்லது, சாதி என்பாரிடத்தும், தென்னாடு, நடுநாடு, வடநாடு என மாறுபடும்.

இறைவழிபாடு என்பது, எப்படி தனிமனித உரிமையோ, அதே போல்தான் திருமணமும். இந்தச் சமூக விலங்கினின்று விலகிக் கொள்ள விழைவோர் இடத்து, சமூக விலங்கான மனிதனாக, சில சமயம் ஏற்படும், தொல்லைகளை எடுத்துக் கூறலாம். அது பெரும் பாலும் உணவுப் பழக்கமே!. தஞ்சை பிறந்த யாவருக்கும், கம்பங்களி, கேழ்வரகு கூழ் தெரியாது. செங்கையில், மாரியாத்தாவுக்கு கேப்பைக் கூழ் ஊற்றும் போது, தஞ்சையில் அசிரிக் கஞ்சி காய்ச்சுவார்கள். பிறப்பொக்கும் என வள்ளுவன் சொன்னாலும் நாம் யாவருமே திருந்தத் தயாரில்லை. திருந்த முற்பட்டாலும், அரசியலார் அதற்கு இடம் கொடுப்பதில்லை. ஊடகங்கஙும் அதனை வேறு மாதிரி திரிக்கும். ஊர், அல்லது, சாதி அல்லது மதம் ஏதோ ஒன்றை அதன்கீழ் பின்னி வெளிப்படுத்துவார்கள். சிறுமிக்கு பாலியல் வண்முறை என்பதை, இந்தச் சாதி, மதம், ஊர் என எழுதி, தவறின் அடிப்படை மறந்து, சமூகம் உய்ய முற்படாமல், கத்தியைச் சுழற்றுவர். இதுவே ஆதிக்க வெறியின் அடையாளம்.

தேர்தல், களத்தில், இந்தப் பகுதியில், இந்த இன மக்கள் அதிகம் எனவே இவர்தான் வேட்பாளர் என்பதாக நிறுத்தும் நிலை. இடதுசாரி சிந்தனை உள்ளவர்கள், கட்சிகள் மட்டுமே எதற்கும் ஆட்படுவதில்லை. எனவே மனித மனங்களே சிந்தித்துத் திருந்த வேண்டும். மதம், தனியுரிமை, இனம் என்பது, குடும்பம் பழக்கம் சார்ந்தது. மதம் தனிமனித மனம் விட்டும், இனம் என்பது குடும்பம் விட்டும் வெளியில் வருதல் கூடாது. சுடுகாட்டையும் நாம் விட்டு வைப்பதில்லை. நாகை திருவாரூர் மாவட்டங்களில், பல ஊர்களில் சுடுகாட்டை ஒன்றாக்கி இருக்கின்றனர். அதன் காரணம் இடது சாரி சிந்தனை யாளர்களே. இத்தகைய மாற்றம் எல்லா ஊர்களிலும், எல்லோரிடத்தும் வரவேண்டும். இன்றைய தமிழக அரசியல் மாற்றங்களுக்கு சிறப்பாக, பின்நின்றது, இடதுசாரி சிந்தை யுள்ளவர்களே. இங்கே இருக்கும் இஸ்லாமானவர்களும், கிறிஸ்துவின் வழி செல்வோரும், சில தலைமுறைக்கு முன், ஏதோ ஒரு பாட்டனின் கிளையிலிருந்து பிரிந்தவராய்த்தான் இருப்பர். "உயிர்களிடத்து அன்பு வேண்டும், தெய்வம் உண்மையென்று தானறிதல் வேண்டும்" என்கிறான் பாரதி பாப்பா பாட்டில். மரம், செடி, கொடி, விலங்கு யாவையும் உயிர்தானே? தெய்வம் பற்றி அவன் சொல்வது, நிச்சயமாக ஒரு இயங்கு சக்தி உண்டு, அதைத்தான் தெய்வம் என்கிறோம் என்கிறான்.

ஈண்டு, வேடிக்கையாக, வருந்த வேண்டியது, **யாதும் ஊரே யாவரும் கேளிர்** என்ற உலகலாவிய பார்வை பிறந்த மண்ணில்தான், இன, மதக் கலவரங்கள்.

ஆளுமைச் சிந்தையும் ஆதிக்க வெறியும், மனித மனங்களை பிறழச்செய்யும். ஆதலால், அவை நம்மும் தோன்றாவண்ணம், அவரவர், மதம், இனம் சார்ந்து, மனித நேயத்தோடு, பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற வள்ளுவன் வாக்கை மனதில் இருத்தி வாழ்வோமாக!

- கு.ப. அசோகன்,
12-06-2021

